ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1918/6 - 2015 ජුනි මස 08 වැනි සඳුදා - 2015.06.08

1918/6 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு யூன் மாதம் 08 ஆந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

### மத்திய மாகாண மாகாண சபை

*மத்திய மாகாண மாகாண சபையின் 2000 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க, பயணிகள் போக்குவரத்து அதிகார சபை நியதிச் சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்டிருந்த அங்கத்தவரை நீக்குதல்*

மத்திய மாகாண மாகாண சபையின் வீதி அபிவிருத்தி, போக்குவரத்து, மின்சக்தி, எரிபொருள் சக்தி மற்றும் வீடமைப்பு, நிர்மாண அமைச்சர் எதிரிவீர வீரவர்தன ஆகிய நான், மத்திய மாகாண மாகாண சபையின் 2000 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, மத்திய மாகாண பயணிகள் போக்குவரத்து அதிகார சபை நியதிச் சட்டத்தின் 6 (ஆ) ஆம் பந்தியின் கீழ் என்னால் அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில் அச்சட்டத்தின் 6 (ஏ) 2 மற்றும் 6 (இ) பந்திக்கு அமைவாக நியமிக்கப்பட்ட கீழ் குறிப்பிடப்பட்ட பணிப்பாளர் சபை அங்கத்தவர்கள் அந்நியதிச் சட்டத்தின் 13 ஆவது வாசகத்தின் பிரகாரம் இராஜினாமாச் செய்வதாக எனக்கு அறிவித்துள்ளதுடன், அவர்கள் 2015.05.23 ஆந் திகதியில் இருந்து அதிகாரம் அளிக்கும் வகையில் மத்திய மாகாணத்தின் மாகாண சபையின் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் பணிப்பாளர் சபையின் அங்கத்துவத்திலிருந்து பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர் என்பதனை இத்தால் அறியத்தருகின்றேன்.

எதிரிவீர வீரவர்தன,<br>
வீதி அபிவிருத்தி, போக்குவரத்து, மின்சக்தி,<br>
எரிபொருள் சக்தி மற்றும் வீடமைப்பு, நிர்மாண<br>
அமைச்சர்,<br>
மத்திய மாகாணம்.

**அட்டவணை**

| இல. | பெயர் | விலாசம் | பதவி |
|---|---|---|---|
| 1. | திரு. ஏகநாயக்க முதியன்சலாகே வடகிடிய வலவ்வே நாலக சம்பத் பண்டார ஏகநாயக | இல. 137/2, மடவல வீதி, கட்டுகஸ்தொட்ட | அங்கத்தவர் |
| 2. | திருமதி கே. டபிள்யூ. சீ. பீ. குமாரி | உதவி பணிப்பாளர், (திட்டமிடல்), மத்திய மாகாண வீதி அபிவிருத்தி, போக்குவரத்து, மின்சக்தி, எரிபொருள் சக்தி மற்றும் வீடமைப்பு, நிர்மாண அமைச்சு | அங்கத்தவர் |

6-614/1

**மத்திய மாகாண மாகாண சபை**

*மத்திய மாகாண மாகாண சபையின் 2000 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க, மத்திய மாகாண பயணிகள் போக்குவரத்து அதிகார சபை நியதிச் சட்டத்தின் கீழ் நியமனம் வழங்குதல்*

*மத்திய மாகாண மாகாண சபையின் வீதி அபிவிருத்தி, போக்குவரத்து, மின்சக்தி, எரிபொருள் சக்தி மற்றும் வீடமைப்பு, நிர்மாண அமைச்சர் எதிரிவீர வீரவர்தன ஆகிய நான், மத்திய மாகாண மாகாண சபையின் 2000 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, மத்திய மாகாண பயணிகள் போக்குவரத்து அதிகார சபை நியதிச் சட்டத்தின் 6 (ஏ) 2 மற்றும் 6 (இ) ஆம் பந்தியின் சட்டத்திற்கு அமைவாக என்னால் அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவர்களின் பெயர்களின் முன்னால் காட்டப்பட்டுள்ள திகதி முதல் அதிகாரங்கள் அளிக்கப்படும் வகையில் மத்திய மாகாண மாகாண சபையின் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் பணிப்பாளர் சபை அங்கத்தவர்களாக நியமிக்கப்பட்டுள்ளார்கள் என்பதனை இத்தால் அறியத்தருகின்றேன்.*

*எதிரிவீர வீரவர்தன,*
*வீதி அபிவிருத்தி, போக்குவரத்து, மின்சக்தி,*
*எரிபொருள் சக்தி மற்றும் வீடமைப்பு, நிர்மாண*
*அமைச்சர்,*
*மத்திய மாகாணம்.*

**அட்டவணை**

| இல. | பெயர் | விலாசம் | பதவி | நடைமுறைப்படுத்தும் திகதி |
|---|---|---|---|---|
| 1. | திரு. என். எஸ். சேனாதீர, | மத்திய மாகாண, போக்குவரத்து ஆணையாளர், போக்குவரத்து திணைக்களம், த. பெ. இல. 104, யடிநுவர வீதி, கண்டி | அங்கத்தவர் | 2015.05.25 |
| 2. | திரு. பொரமடுள்ள வீரசேகர முதியன்சலாகே பாலித்த சிறிசேன | இல. 114 ஏ, பரிகம வீதி, ஹல்லொலுவ. | அங்கத்தவர் | 2015.05.25 |

6- 614/2

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.